திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 04 ஏப்ரல் 2006

அடு போர்ச் செழிய இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே.

புறம்-18

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஏப்ரல்–06

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |

பல்கலைக்கழக உறுப்பினர்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 04
*ஏப்ரல்* 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 505

புறநானூறும் வைகைப்படுகையும் 507

இரா.சதாசிவம்

வஞ்சி தானே முல்லையது புறனே 510
- ஓர் உளவியல் ஆய்வு

ந. அருள்மொழி,

சங்கஇலக்கியத்தில் மழலை 518

முனைவர். வி. காந்திமதி,

பழனிமலைத் தொடர்வாழ் 533
பழங்குடி மக்கள் வாழ்வில்
சேர நாட்டின் தாக்கம்

ஆதி பாலசுந்தரன்,

# இதழ்மணம்

சங்க இலக்கியத்தில் முதல் கரு உரிப்பொருள்கள் மக்கள் வாழ்க்கையோடு நிறைந்த தொடர்புடையன. உரிப்பொருள் மனித மனத்தின் நுண்பொருள் விளக்கமாக இலக்கியப் படுத்தியிருப்பதை பேராசிரியர் ந.அருள்மொழி உளவியல் ஆய்வு நோக்கில் வஞ்சி தானே முல்லையது புறனே என்னும் தலைப்பில் விரிவாகச் சிந்தித்துக் கட்டுரை எழுதியுள்ளார்கள். கட்டுரை ஒரு புதிய பார்வையாகும்.

சங்க இலக்கியத்தில் மழலை என்னும் தலைப்பில் பேராசிரியர் வீ. காந்திமதி மழலைச் செல்வத்தின் மாண்பு குறித்த தமிழ் இலக்கிய வரலாற்றை தொகுத்துப் பார்த்துச் சிந்தித்துள்ளார். சங்கஇலக்கியம், பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களில் குழந்தைச் செல்வம் தமிழ்நாட்டில் போற்றிப் பேணி வளர்க்கப்பட்ட அருமை பெருமைகள் விரிவாக எழுதப்பட்டுள்ளது, பொருளும் இன்பமும் பயப்பதாகும்.

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் நாச்சிமுத்து அவர்கள் மேற்பார்வையில் ஆய்வுப் பணியாற்றும் அறிஞர் ஆதிபாலசுந்தரம் பழனி மலைத்தொடர் வாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேரநாட்டின் தாக்கம் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. பழனிமலைப் பகுதியில் வாழும் பழங்குடியினரிடையே சேரநாட்டு மரபு அழியாது வழங்கி வருவதைத் தெளிவுற விளக்கியுள்ளார். வழக்கிழந்த ஒற்றையடிப் பாதை மறைந்து போன செய்தியும் சிந்தனைக்குரியதாகும். உலகெங்கிலும் உள்ள சிறுபான்மை பழங்குடி மக்களின் மரபுகள் பெரும்பான்மையினரின் தாக்கத்தால் செயலிழந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். அன்றாட வாழ்க்கையின் சின்னஞ்சிறு நிகழ்வுகளும் பழக்கவழக்கங்களும் விழாக்களும் மரபுவழியான மானிட உணர்வைத் தூண்டி இனிய வாழ்க்கைக்கு வித்திடுவதை கவனத்தில் கொண்டு அவர்களுடைய சமூகவாழ்க்கை மரபுகளுக்குப் பாதுகாப்பளிப்பது அவர்களுடைய வாழ்வை அர்த்தமுடையதாகவும் இன்பமுடையதாகவும் மணம் கமழச் செய்கிறது.

புறநானூறு குடபுலவியனார் பாடலில் வைகை படுகை குறித்த தன்னுடைய கவலையை பாண்டியன் நெடுஞ்செழியனிடத்தில் வலியுறுத்தி இருப்பது இன்றைக்கும் பொருத்தமாக இருப்பது விளக்கப்பட்டுள்ளது.

தாமிரபரணியாறு என்றும் நீர்வளம் மிக்கு இருப்பதன் காரணம் *அதன் உற்பத்தியிடத்தில் காடு அழியாத தன்மையில் இருப்பதேயாகும்.* அதுபோல வையை உற்பத்தியாகும் பகுதியில் காடு வளர்ப்போம். நீர் வரவைப் பெருக்குவோம்.

# புறநானூறும் வைகைப்படுகையும்

இரா.சதாசிவம்

குடபுலவியனார் விரிந்த அறிவுடைய சங்க காலத்துச் சான்றோர். அவருடைய பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. அச்செய்யுட்கண் அவர் விளக்கும் சிந்தனை இன்றைக்கும் இன்றியமையாத மக்கள் தேவையாகும். மக்கள் நலம் பேணும் அரசுகள், இளைஞர்கள் போற்றிப் பேண வேண்டிய அறிவுரையாக விளங்குகிறது.

பாண்டியநாடு வையையாற்றின் படுகையாகும். வையையாறு பல கிளையாறுகள் சேர்ந்து ஒன்றிணைந்து வையை என்னும் பொய்யாக் குலக்கொடியாக பாண்டிய நாட்டை வளம்கொழிக்கச் செய்கிறது. தென்கிழக்காக ஓடி இராமநாதபுரத்திற்கு அருகில் பெரிய கண்மாயைப் பெருக்கிப் பின் கடலை அடைகிறது.

வையையின் மேல் பகுதியில் பல கிளையாறுகள் உற்பத்தியாகி வையையில் கலந்து பெருநதியாக பெருகி வருகிறது. ஆனால் பெருகிவரும் நீர் கடலைச் சேராமல் பெரும் கால்வாய்களை வெட்டி பள்ளப்பகுதியில் நீண்ட கரைகளை அமைத்து நீரைத் தேக்கிக் கண்மாய் ஏரிகளை கட்டவேண்டும் என்னும் கருத்தைச் சங்ககாலத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வலியுறுத்திக் குடபுலவியனார் சொல்லியிருப்பது இன்றைய அவசிய அவசரத் தேவையாகும்.

பாண்டியநாட்டின் மேற்பகுதியில் உற்பத்தியாகி கீழ்பகுதியில் வளம் சேர்ப்பது வையையாறு. மேல்பகுதியில் பல சிற்றாறுகளாக உற்பத்தியாகும் வையைப் பகுதியில் மரங்களை வளர்த்து பசுமையான வானளாவிய காடுகளைப் பராமரித்து நீர்வளத்தைப் பெருக்கவும் வற்றாத வையையாகப் பொய்யாக் குலக்கொடியாக மீண்டும் வையைப் படுகைப் பகுதியை நீர்வளம் மிக்க நாடாக மாற்ற ஊக்கமும் உறுதியும் நிறைந்த முயற்சி தேவை. பிற மாநிலங்களில் ஓடும் ஆறுகளிலிருந்து தண்ணீரை எதிர்பார்ப்பதை விட வையையாற்றின் நீர்பிடிப்புப் பகுதியில் நீர் ஆதாரங்களைப் பெருக்கும் வகையில் காடுகளை மரக்கன்றுகளை நட்டுப் பராமரிப்பது அவசரத் தேவையாகும். இப்பின்னணியில் குடபுலவியனார் பாடிய புறநானூற்றின் பதினெட்டாம் பாடலைப் படிப்பது இன்பம் தரும்.

வானம் பார்த்து அகன்று விரிந்த நிலம் முழுவதும் உழுது விதைத்தாலும் உழவன் முயற்சி சிறப்பதில்லை. மானம் பார்த்த பூமி என்பது பயிரும் உழவனும் நீருக்காக வானத்தைப் பார்த்து ஏங்கிநிற்கும் அவல நிலையை படம்பிடித்துக் காட்டுவதாகும். எனவே நீண்ட கால்வாய்களை வெட்டி கண்மாய் ஏரிகளை அமைத்துப் புஞ்சை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துங்கள் என அரசியலாருக்கு அறிவுறுத்துகின்றார்.

அகல் ஞாலம் தன்னகப்படுத்திய முயற்சியாளர்களின் வழித்தோன்றல் எனப் பாண்டியன் நெடுஞ்செழியனை வாழ்த்திய குடபுலவியனார் பாண்டியநாட்டின் நீர்ச் சிறப்பால் வாளை, ஆரல், வரால் கெடிற்றி முதலான சுவைமிக்க மீன்வளம் உழைக்காமலே மக்களுக்கு கிடைக்கும் வளப்பமிக்க நாடுடைப் பெரும இம்மைச் செல்வம் நிறைய உடைய உனக்கு மறுமை உலகத்துச் செல்வமும் இம்மையில் பகை அஞ்சி திரை செலுத்தும் படைச் செருக்கும் ஈகையால் இசை நிறுத்தவும் வேண்டின் அதற்குரிய தற்றகைமை அறிவாயாக.

நீர் இல்லாமல் உடல், வளம் இல்லை
உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவார்
உடல் வாழ்க்கை உணவின் படையலாகும்.
உணவு எனப்படுவது நிலத்தோடு நீர் சேர்ந்ததன்
பயனாகும். நிலத்தொடு நீர் சேர்த்தோர் உடம்பொடு
உயிர் சேர்த்த படைப்புக் கடவுளோடு ஒப்பர்

எனவே புஞ்சை நிலத்தில் மானாவாரியாக விதைத்துவிட்டு வானத்தைப் பார்க்கும் வேளாண் வாழ்க்கை உழவன் எடுத்த முயற்சிக்கு உதவாததாகும். அதனால் வையாற்றின் படுகைப் பகுதியில் விரைந்து காலம் தாழ்த்தாது கண்மாய் ஏரிகளையும் காடுகளையும் முயற்சியால் படைப்பாய் அங்ஙனம் படைத்தோர் இவ்வுலகத்தில் வாழ்ந்தோர் ஆவர் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் மக்களுக்கு வழங்கிய அரசாகும். அத்தகைய ஆட்சியாளரே அறம் முதற்பொருள் இன்பம் வீடுபெறுதற்குரியவர் ஆவர். மற்றையோர் ஈண்டு வாழா வெட்டிகளே ஆவர் என அறிவுறுத்துவது கல்வியாளர்களும் அரசியலாரும் சிந்திக்கவேண்டிய காலத்தின் கட்டாயமாகும்.

## பாடல் புறம் 18

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியல் ஞாலம்
தாளின் தந்து, தம் புகழ் நிறீஇ,
ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக, நின் ஆயுள்தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூஉம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி;
வான் உட்கும் வடி நீள் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள் வலி முருக்கி,
ஒரு நீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல் இசை நிறுத்தல் வேண்டினும், மற்று அதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே;
வித்தி வான் நோக்கும் புன் புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்,
அடு போர்ச் செழிய இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே;
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே.

– புறம் 18

திணை-பொதுவியல் துறை-முதுமொழிக் காஞ்சி
பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது

# வஞ்சி தானே முல்லையது புறனே – ஓர் உளவியல் ஆய்வு

ந. அருள்மொழி,
தமிழ் விரிவுரையாளர்,
மகளிர் கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

மானுட வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் அடிப்படையானது மொழி. மொழியின் பெருமை, மொழி தோன்றிய காலத்தொன்மையையும் அவ்வக்காலங்களில் மானுடர்க்குப் பயன்படும் படைப்புத்தன்மையும் உள்ளடக்கியது. நம் தமிழ்மொழியும் காலத்தொன்மை உடையது. மானுடர்க்குப் பயன்படும் படைப்புத்தன்மை உடையது என்பதைச் சங்க இலக்கண, இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

காதலும் வீரமும் மேலோங்கி இருந்த சங்கச் சமூகத்தில் அகம், புறம் பற்றிய தொடர்பினைத் தொல்காப்பியர் சுட்டிச் சென்றுள்ளார். புறநானூற்றில் வஞ்சித்திணைப் பாடல்களும் ஐங்குறுநூற்றில் முல்லைத் திணைப் பாடல்களும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள வஞ்சித்திணையும் புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள வஞ்சித்திணையும் உளவியல் முறையில் தொடர்புறுவதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## வஞ்சி, முல்லைத்திணைத் தொடர்பு

வஞ்சி என்ற புறத்திணையும் முல்லை என்ற அகத்திணையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுகின்றன. அகமும் புறமும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுவதை, அகம் புறம் எதிர்வை நேர்ப்பதம் எதிர்ப்பதமாகப் பார்க்காமல் கால்பந்தாட்ட மைதானத்தின் எதிரெதிர் தூண்களாகப் பார்க்கலாம். இவ்வெதிர்வின் நடுவில் ஒரு வெளி உள்ளது. இந்த வெளி சூனியம் அல்ல. இது இரு எதிர்வுகளுக்கு நடுவிலான அர்த்தவெளி. இந்த அர்த்தவெளி, இரு எதிர்வுகளின் வீர்யத்தால் உருப்பெற்ற இந்த வெளி பல்வேறு பிற எதிர்வுகளைப் பெற்றுக்கொடுத்துக், கொண்டே இருக்கும் என்று தமிழவன் குறிப்பிடுகின்றார். இவரது கூற்றின்படி அகமும் புறமும் ஒன்றுக்கொன்று கருத்தமைவோடு பொருந்துகின்றன.

முல்லையாகிய அகத்திணையில் தலைவன் வினைக்காகப் (பொருள், ஓதல், பகை, தூது) பிரிந்து செல்வான். அப்பொழுது தலைவி தலைவனுடைய பிரிவினை ஆற்றியிருப்பாள். எனவே தான் முல்லையினுடைய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் எனச் சுட்டப்படுகின்றது. இதேபோல் வஞ்சியாகிய புறத்திணையில் தலைவன் போருக்குச் செல்வான். அவ்வமயம் வஞ்சித் தலைவனின் தலைவியும் பிரிவாற்றியிருப்பாள். எனவே, வஞ்சித்திணையும் முல்லைத் திணையும் தொடர்புறுகின்றன.

## மாஸ்லோவின் கொள்கை

ஆப்ரகாம்மாஸ்லோ அமெரிக்க நாட்டு உளவியலறிஞர். இவர் மனிதஊக்கம் குறித்து வழங்கிய கோட்பாடு தேவை நிறைவுக் கோட்பாடு எனப்படுகிறது. இவர் மனிதரின் ஊக்கத்தில் ஐந்து வகையான தேவைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. உடல் சார்ந்த தேவைகள்
2. பாதுகாப்புத் தேவைகள்
3. அன்புத் தேவைகள்
4. தன்மதிப்புத் தேவைகள்
5. மேன்மையாக்கத் தேவைகள்

ஆகியவை அவர் குறிப்பிட்ட தேவைகள் ஆகும். இதில் இரண்டாவது தேவையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புத் தேவையானது வஞ்சி, முல்லைத்திணைகளின் உளவியல் தன்மையோடு பொருந்துகின்றது.

புறச்சூழல்களில் நிகழும் அபாயங்கள் (குளிர், வெப்பம்) அச்சுறுத்தல்கள் (வேதனை), காயம் போன்றவற்றிலிருந்து உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வுக்குப் பாதுகாப்புத் தேவைகள் எனப்பெயர். இப்பாதுகாப்புத் தேவை ஐங்குறுநூற்றிலும் புறநானூற்றிலும் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## படிமங்களில் வெளிப்படும் பாதுகாப்புணர்வு

கண் முன் கருத்தைப் புலப்படுத்தும் படிமங்களின் பண்பு இயைபுகளால் பாதுகாப்புணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது. "புலன்

அனுபவங்கள் வாயிலாக ஓர் அனுபவத்தை உருவாக்குவதே படிமம் எனப்படும். இப்புலன் அனுபவத்தை ஐம்புலன்களின் வழியே கவிஞன் தருகின்றான். இதை வருணனை வாயிலாகக் கவிஞன் கூறுகின்றான். இதனையே லியான் எடல் என்ற உளவியல் அறிஞர் மனிதனின் தொன்மைப் படைப்பாற்றல், படிமப் படைப்பாற்றல் போன்ற கற்பனைகளுடன் தொடர்புடையதே இலக்கிய உளவியல்" என்பதைச் சு.சிவமணியின் ஆய்வேடு தெரிவிக்கின்றது. இக்கருத்தின் அடிப்படையில் புலன் அனுபவங்கள் பாதுகாப்புணர்வை ஊடாடி நிற்பதைப் பின்வருமாறு காணலாம்.

## *காட்சி அனுபவம்*

ஏதேனும் ஒரு காட்சியின் மூலம் கருத்தை உணரவைத்தல் காட்சி அனுபவம் எனப்படும். இக்காட்சி அனுபவம் முல்லைத் திணைப் பாடல்களில் பாதுகாப்புணர்வைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளது.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். தலைவன் செல்கின்ற வழி எவ்வாறு இருக்குமோ என்று தலைவி அச்சம் கொள்கின்றாள். தீயிடைச் சுடப்பட்ட பொன்னைப் போலக் கொன்றை மலரையும் திருமணவிழாவிற்குச் செல்பவர் போன்று அணி செய்து கொண்ட மறவர்களையும் உடைய கானகத்தின் வழி தலைவன் செல்வான் எனத் தோழி தலைவிக்குப் பதிலுரைப்பதை,

> நன்றே காதலர் சென்ற ஆறே
> சுடுபொன் அன்ன கொன்றை சூடிக்
> கடிபுகு வனர்போல மள்ளரும் உடைத்தே
>
> – (ஐங்குறுநூறு முல்லை புறவணிப் பத்து பா.எ. 2)

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

சுடப்பட்ட பொன் போன்ற கொன்றை மலர்கள் கடிபுகுவனர் போல் மள்ளர் போன்ற உவமைப்படுத்தப்பட்ட காட்சிப் படிமங்கள் மூலம் தலைவன் பாதுகாப்பான காட்டின் வழிச் செல்வது வெளிப்படுத்தப்படுகின்றது. தான் வீட்டில் பாதுகாப்புடன் இருப்பது போலவே தலைவனும் பாதுகாப்புடன் இருக்கவேண்டுமென்ற தலைவியின் உளநிலையைத் தோழி கூற்றால் அறியலாம்.

## கேட்டல் அனுபவம்

காதால் கேட்கப்படும் ஒலிப்படிமங்கள் மூலம் பாதுகாப்புணர்வினை மறைமுகமாக அறிய முடிகின்றது.

தலைவன் கார்காலத்தில் பிரிந்து செல்வதைத் தலைவி விரும்பவில்லை என்பதை,

மாமழை இடியூஉத் தளிசொரிந் தன்றே
வாள்நுதல் பசப்பச் செலவயர்ந் தனையே

-(ஐங்குறுநூறு, முல்லை-விரவுப்பத்து, பா.எ.3)

என்ற வரியால் அறியலாம். மாமழை இடியூஉ என்ற சொல்லாட்சியானது கேட்டல் அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. இடி துன்பத்தைத் தருதல் போலத் தலைவன் பிரிவும் தலைவிக்குத் துன்பத்தைத் தரும். எனவே, தலைவன் உடனிருப்பதே தலைவிக்குப் பாதுகாப்பு என்ற உளவியல் ரீதியான கருத்தினையும் இக்கேட்டல் அனுபவம் உணர்த்துகின்றது.

## நுகர்தல் அனுபவம்

நுகர்தல் அனுபவம் படிமங்கள் வாயிலாக வெளிப்படுத்தப் படுகின்றது.

கார்ப்பருவத்தில் பாசறையில் உறைந்திருக்கின்ற தலைவன் தலைவியின் உருவவெளிப்பாடு கண்டு,

முல்லை நாறும் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே

(ஐங்குறுநூறு முல்லை, பாசறைப்பத்து, பா.எ. 6)

என்று கூறுகின்றான். முல்லைப்பூ மணக்கும் கூந்தல் எனக் கூறும்போது நுகர்தல் அனுபவம் கிட்டுகின்றது.

முல்லையின் மணம் நுகர்வோருக்கு இனிமை தரும். தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் பாதுகாப்புடன் இல்லறக் கடமைகளை ஆற்றியிருத்தலே இல்லறத்திற்கு இனிமை தரும் என்ற கருத்து நுகர்தல் அனுபவம் வாயிலாக எய்தப் பெறுகின்றது.

## சமுதாயச் சூழ்நிலை வழிப் பாதுகாப்புத் தேவை

சூழ்நிலைத் தூண்டல்களில் சமுதாயச் சூழ்நிலையும் ஒன்றாகும். சமுதாய நிகழ்ச்சிகள் உணர்வுகளைத் தூண்டி உணர்ச்சி வசப்பட வைக்கின்றன. இந்தச் சமுதாயச் சூழ்நிலைகள் புறநானூற்று வஞ்சித்திணைப் பாடல்களில் பாதுகாப்புத் தேவையை வலியுறுத்தி நிற்பதைக் காணலாம்.

## பழியிலிருந்து பாதுகாத்தல்

சான்றோர் இயல்பாகவே மனநலம் நன்குடையவராக இருப்பர். ஆயினும் அவர் வாழும் சமுதாயத்தின் இயல்பிற்கேற்ப அவர் மனநிலை மாறுதற்கும் வாய்ப்புண்டு என நாகராசன் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தானது கோப்பெருஞ்சோழனின் மனநிலை மாற்றத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

கோப்பெருஞ்சோழனின் புதல்வர்களே அவனை மாற்றானாய்க் கருதிப் போரிடத் துணிந்தனர். கோப்பெருஞ்சோழனும் போரிட முடிவு செய்தான். மன்னனுக்கும் அவனது புதல்வர்களுக்கும் ஏற்பட்ட கருத்துமுரணை புலவர் புல்லூற்றூர் எயிற்றியனார் அறிகின்றார். புலவர், சேர, பாண்டியர் போன்ற பகை மன்னர்கள் சோழனின் இத்தகைய செயலைக் கண்டு நகைப்பர் என்ற சமுதாயச் சூழ்நிலையினையும் உணர்கின்றார். எனவே, சூழ்நிலைத் தூண்டலுக்கு ஆட்பட்டு,

----- இளையோர் தோற்பின்
நின்பெரும் செல்வம் யார்க்கு எஞ்சுவையே?
அமர்வெஞ் செல்வ நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே
அதனால் ஒழிகதில் அத்தை நின்மறனே - (புறம் 213)

எனக் கூறிப் பழி வாழ்விலிருந்து மீட்டுக் கோப்பெருஞ்சோழனைப் பாதுகாக்கின்றார். பழியின்றிச் சங்க மாந்தர் வாழ்ந்தமைக்குப் புலவர்களின் அறப்பாதுகாப்பும் ஒரு காரணம் எனலாம்.

## குழந்தைகளைப் பாதுகாத்தல்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக் காலால் இடறச் செய்து கொல்ல நினைக்கின்றான். அப்போது கோவூர்கிழார் என்ற புலவர் குழந்தைகளின் இயல்பினைக் கூறிப் பாதுகாக்க நினைக்கின்றார். அவர் வாழ்ந்த காலமோ முடியாட்சிக் காலம். மன்னனை எதிர்க்க முடியாத நிலை. ஆனால், இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலிருந்து குழந்தைகளைக் காக்க அவரது உணர்ச்சி முனைப்புறுகிறது.

களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
*புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு* நோக்கி
விருந்திற் புன்கண் நோவுடையர்
கேட்டனையாயின் நீ வேட்டது செய்ம்மே - (புறம் 46)

என்ற பாடல் மூலம் புலவர், தன் கருத்தைக் கூறிவிட்டதாகவும் மன்னன் அவனது விருப்பம் போல் செயல்படலாம் என்றும் கூறுகின்றார்.

மன்னன் என்பவன் கட்டளைக்கு ஆட்படமாட்டான். அவனது போக்கிலேயே மனதை ஆட்படுத்தி விலகிக் கொண்டால் மன்னன் சரியான முடிவெடுப்பான் என்ற உளவியல் முறை அறிந்தே நீ வேட்டது செய்ம்மே என்று கூறி வெற்றிபெறுகின்றார்.

புலவர்கள் மன்னர்களைப் புகழ்தல், அறநெறி கூறல், மக்கள் நிலை கூறுதல், கவிதைகள் படைத்தல் என்ற நிலையில் மட்டுமல்ல மன்னன் தவறிழைத்தபோது அதை உணர்த்திப் பழியிலிருந்து பாதுகாக்கும் பணியையும் செய்தனர்.

## பெண் பாதுகாப்பு

பெண்ணைப் பாதுகாப்பதற்காகவும் போர்கள் நிகழ்ந்துள்ளதைச் சங்க இலக்கண, இலக்கியங்கள் சுட்டுகின்றன. சங்ககாலத்தில் பெண் கேட்டு வந்த பகை வேந்தனை எதிர்த்துப் போரிட்டு நின்றதை,

ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனொடு வேறுநின்றன்று

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்

எனத் தொல்காப்பியரும் கூறுகின்றனர்.

பெண்ணிற்குத் தகுந்த மணாளனைத் தேர்ந்தெடுப்பதில் பெண்ணின் தந்தை தமையன் ஆகியோர் பங்கும் இருந்திருக்கின்றது. வீரக்குடியில் பிறந்த தங்கள் தகுதிக்குக் கீழான நிலையில் உள்ள (வீரமற்ற ஆனால் *செல்வம் நிறைந்த)* வேந்தர் பெண்கேட்டு வந்த போதும் தகுதிக்கு ஏற்ப வணங்கி வராத பெருவேந்தர் பெண்கேட்டு வந்தபோதும் போர் நிகழ்ந்துள்ளதை,

---- கருஞ்சினை
வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் வேந்தர் வரினும் தன்தக
வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்- (புறம் 338)

என்ற பாடல் வழி அறியலாம்.

பெண்ணுக்காகப் போர் தொடுத்த வேந்தனின் மனநிலையினையும் அப்பெண்ணின் தமையனின் மனநிலையினையும் ஆராயும்போது தன் பெண்ணிற்குத் தகுந்த மணாளனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பாதுகாப்புணர்வும் தன் பெண் நன்றாக வாழவேண்டுமென்ற பாதுகாப்புணர்வும் மேலோங்கி இருப்பதை உணரமுடிகின்றது.

### நாட்டின் பாதுகாப்பு

நாட்டின் எல்லைப் பாதுகாப்பிற்காக பகை நாட்டினை எரியூட்டி அழித்துள்ளனர். இதைத் தொல்காப்பியம், எரிபரந்தெடுத்தல் எனச் சுட்டுகின்றது. இதைப் புறப்பொருள் வெண்பாமாலை,

நேராதார் வளநாட்டைக்
கூரெரி கொளீஇயன்று

எனக் குறிக்கின்றது. பிறநாட்டைத் தீயிட்டு அழித்த செய்தியினை,

"எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்

புலம்கெட இறுக்கும்" (புறம் 16)

"ஏமநன் னாடு ஒள்ளெரி ஊட்டினை" (புறம் 7)

போன்ற புறநானூற்றுப் பாடல்களால் அறியமுடிகின்றது.

பிறநாட்டை அழித்து எரியூட்டித் துன்புறுத்தித் தன் எல்லையை விரிவாக்கம் செய்த மன்னர்களின் உளவியலை உற்றுநோக்கும் போது தன் நாட்டையும் தன் மக்களையும் பிறநாட்டு மன்னன் வதைத்து துன்புறுத்தி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் கூடிய எல்லைப் பாதுகாப்பு உணர்வே காரணமாகும்.

## முடிவுரை

காட்சி அனுபவம், கேட்டல் அனுபவம், நுகர்தல் அனுபவம் ஆகியவை முல்லைநிலத் தலைவியின் பாதுகாப்புத் தேவையினைக் கூறுகின்றன. வஞ்சிவேந்தன் பிறநாட்டை எரியூட்டுதல் தன் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் செயல்பாடேயாகும். புலவர் சூழ்நிலைத் தூண்டலால் செயல்பட்டு மன்னனைப் பெரும்பழியிலிருந்து காத்தது, அறப்பாதுகாப்புணர்வு கருதியே ஆகும்.

இவ்வாறு வஞ்சி, முல்லைத் திணைகள் உளவியல் அறிஞர் ஆபிரகாம் மாஸ்லோ கூறிய பாதுகாப்புத் தேவையுடன் உளவியல் முறையில் பொருந்துகின்றன.

## குறிப்புகள்

1. தமிழவன், அகம்புறம் - எதிர்வும், மாயா எதிர்வும் ப. 18
2. சிவமணி வெட்சி தானே குறிஞ்சியது புறனே - ஓர் உளவியல் ஆய்வு (எம்.ஃபில் பட்ட ஆய்வேடு) ப. 71
3. நாகராசன், தமிழரின் மனம் பற்றிய கோட்பாடு, ப. 230

# சங்கஇலக்கியத்தில் மழலை

முனைவர். வீ. காந்திமதி,
இணைப் பேராசிரியர்
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை-1.

## *முன்னுரை*

மழலையர் தரும் இன்பம் மகத்தானது. குழந்தை என்று சொல்லும்போதே உள்ளம் குதூகலம் அடைகிறது. மனிதன் சேர்த்து வைக்கின்ற செல்வங்கள் பலவகைப்படும். இன்பப் பயனாகப் பெற்ற மழலையரே ஒருவனுக்கு உண்மையான செல்வமாகும். பிறபொருட் செல்வங்கள் யாவும் முயற்சி செய்து உடல்வருந்திப் பெறப்படுவன. அதுமட்டுமல்லாமல் பொருட் செல்வம், இன்பம் தரக்கூடியது என்றாலும் இழந்துவிடக்கூடியது. ஆனால் மக்கட் செல்வமோ, இன்பம் தந்து அவ்வின்பத்தை இழக்காமல் என்றும் மகிழ்ச்சியைத் தரும் நிலைபேறு உடையது.

"கடந்த ஞானியரும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" துறவிகளாக வாழ்ந்தாலும் குழந்தையர் மேலுள்ள பாசத்தை அறுக்க இயலாது என்கிறார் ஒட்டக்கூத்தர்.

"குழவி மருங்கினும் கிழவதாகும்" (தொல், புறத்திணை. நூ.24) என்பது தொல்காப்பியம். இவ்விலக்கணத்தை மையப் பொருளாக்கிப் பிள்ளைத் தமிழ் என்னும் சிற்றிலக்கிய வகை தோன்றியது. அகம்-புறம் என்ற பொருட்பாகுபாடுகளுடைய சங்க இலக்கியப் பனுவல்களில் மழலையரை குறித்த தகவல்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆராய்வது ஈண்டு நம் நோக்கமாகும்.

## *மழலை*

வழக்காற்றில் 'மழலை' என்ற சொல் குழந்தையரின் பேச்சைக் குறிக்கவே மிகுதியும் பயன்படுகிறது. குழந்தையரது மொழி வளர்ச்சியில் முதல்நிலை என்று கூறலாம். குழந்தை, 'தானே ஒலி எழுப்பி நிற்கும் மழலை நிலை' என்று கூறுவர். மூன்று அல்லது நான்கு வயதிற்குட்பட்ட குழந்தையரின் பேச்சையே மழலை என்ற சொல்லால் வழங்குகின்றனர்.

குழந்தையரின் 'திருந்தாச் சொல்' எனக் கழக அகராதி குறிப்பிடுகிறது.

"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும்" (அகம்.16.வரி.4,5)

"மழலை இன்சொல்" (அகம், 275, வ.7)

"மழலை நாவின்" (பதிற், 2 ஆம்பத்து பா. எண்.5.)

இச்சங்க இலக்கியத் தொடர்களால் 'மழலை' என்பது மழலைச் சொற்களையே குறிக்கின்றது என்பதை நன்கறியலாம். ஆனால், மழலைச் சொற்களைப் பேசும் குழந்தையராம் மழலையரைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது.

## *குழந்தைப்பருவம்*

திரு. மு. அறம் என்பார். தமது 'குமர உள்ளம்' என்ற நூலில் குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களின் ஆண்டு வரையறையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். (1)

| **பருவம்** | ***வயது*** |
|---|---|
| குழவிப்பருவம் | 1-3 |
| சிறுகுழந்தை | 3-6 |
| குழந்தைப்பருவம் (முன்) | 6-9 |
| குழந்தைப் பருவம் (பின்) | 9-12 |

'பிறந்தது முதல் இரண்டு வாரம் வரை அதாவது தொப்புழ்க் கொடியை அறுத்து ஆறும் வரையுள்ள பருவம் புனிற்றுப் பருவம் (Neonate Period) ஆகும். மூன்றாம் வாரம் தொடங்கி இரண்டாம் ஆண்டு முடிவு வரை கைக்குழவிப் பருவம், இதனை இளங்குழவிப் பருவம் (Infancy) என்பர். மூன்றாம் ஆண்டிலிருந்து 12-ஆம் ஆண்டுவரை முது குழவிப் பருவம். இது பைதல்பருவம், பேதைப்பருவம் (Child hood) எனப்படும்.' இவ்வாறு மூன்று நிலைகளில் குழந்தைப் பருவத்தைப் பாகுபாடு செய்கின்றனர்.

'பிறந்தது முதல் ஏறக்குறைய 11 ஆண்டுகள் வரையிலான காலம் குழந்தைப் பருவமாகும்' என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுகிறது.

## *குழந்தைப் பெயர்கள்*

பாப்பா, சிறுவர், மழலை, மகவு, பிள்ளை, இளைஞர், மக்கள்,

பாலர், குழந்தை குழவி, மகன், மகள் போன்ற சொற்கள் குழந்தையரைக் குறிக்கப் பேச்சுத் தமிழில் வழங்குகின்றன.

தொல்காப்பியர், மரபியலில் குறிப்பிடுகின்ற இளமைப் பெயர்களுள், குழவி, மகவு என்பன மக்கட்குரிய இளமைப் பெயர்களாகும்.

"குழவியும் மகவும் ஆயிரண்டு அல்லவை
கிழவ அல்ல மக்கட்கண்ணே" (தொல்.மரபு.567)

மேலும், மழ, குழ என்னும் சொற்கள், இளமைப்பொருளைக் குறிக்கின்றன என்கிறது தொல்காப்பியம்.

"மழவும் குழவும் இளமைப் பொருளே" (தொல். சொல்.311) இச்சொற்களில் *'மழ' என்ற சொல்லடியாகப் பிறந்தது 'மழலை' என்றும்* 'குழ' என்ற சொல்லடியாகப் பிறந்தது குழந்தை என்றும் கூறலாம்.

*குழவி :*

சங்க காலத்தில் குழந்தை என்ற சொல் யாண்டும் இல்லை. சங்கப் பனுவல்களில் 'குழவி' என்ற சொல்லே பயின்று வந்துள்ளது.

"ஈன்றோள் நீத்த குழவி போல" (புறம் 230, வ.7)
"குழவியைப் பார்த்துறூஉந் தாய்போல்" (மருதக்கலி, 99,வ.4)
"தூய்முலை தழுவிய குழவி போல" (பட்டினப், வ.66)

இத்தொடர்களில் "குழவி" என்ற சொல் குழந்தையைக் குறிக்கின்றதை அறியலாம்.

மேலும் யானைக்கன்று, எருமைக்கன்று, மான்கன்று என்னும் பொருளிலும் □குழவி□ என்ற சொல் வழங்கியிருக்கிறது.

"முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி" (குறுந், 394, வ.1)
"துடியடி யன்ன தூங்குநடைக் குழவி" (பொருந, வ.125)

தொல்காப்பியரும்,

"குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை" (தொல். மரபு. 563) என்று குறிப்பிடுகின்றார். சங்க காலத்தில் "குழவி" என்ற சொல் குழந்தையையும் கன்றையும் குறித்திருப்பது கண்கூடு. இக்காலத்தில் "குழவி" என்ற சொல் வழக்கொழிந்து குழந்தை என்றே வழங்கப்படுகிறது.

ஆனால் "அம்மிக் குழவி" என்ற சொல் காணப்படுகிறது.

*சிறுவர்*

ஆண்குழந்தையரையே "சிறுவர்" என்று இக்காலத்திலும் வழங்குகிறோம். பாவேந்தர் பாரதிதாசன் "சிறுவர் சிறுமியர்" என்று குறிப்பிடுகின்றார். பேரா. பூவண்ணன், "குழந்தை என்ற சொல் ஒருவயதுக் குழந்தையைத் தான் குறிக்கும்." ஆனால் சிறுவர் என்ற சொல் 3வயது முதல் 14 வயதுள்ள வரைக் குறிக்கும் ( ) என்கிறார்.

சங்க இலக்கியத்தில்,

"மறுவருஞ் சிறுவன் தாயே" (குறுந், 45,வ. 4)
"ஓம்முது பெண்டிர் காதலஞ் சிறாஅன்" (புறம், 276,வ.3)
"கல்லாச் சிறாஅர்" (நற், 3,வ.4)

என்றாவது சிறுவன், சிறார் என்ற சொற்கள் ஆண்குழந்தையரைக் குறிக்கப் பல இடங்களில் பயன்பட்டிருக்கின்றன.

"கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ" (குறிஞ்சிக் கலி. 65,வ.16)

"சிறுமி" என்ற சொல் ஒரோவிடத்துக் காணப்படுகிறது.

*புதல்வன் :*

'புத்' என்னும் நரகக் குழியில் விழாதவாறு தம்மைப் பெற்றெடுத்த பெற்றோரைப் பாதுகாப்பதால் 'புதல்வன்' என அழைக்கப்படுவதைக் கழக உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். பரிமேலழகரும் இப்பொருளிலேயே 'புதல்வரைப் பெறுதல்' என்று அதிகாரத் தலைப்பிட்டிருக்கிறார். 'அறிவறிந்த நன்மக்கட்பேறு' என வள்ளுவர் குறிப்பிடுவதால் 'மக்கள்' என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது என்கிறார்.

'கணவர் உவப்பப் புதல்வர் பயந்து' (மதுரைக், 600)
'கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி யாடும்' (சிறுபாண், 62)
'பொற்காற் புதல்வர்' (பட்டினப், 24)

பல சங்க இலக்கியப் பாடல்களில் புதல்வர் என்ற சொல் ஆண்குழந்தையைக் குறிக்கப் பல்லாற்றானும் பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

## பிள்ளை :

பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் 'பிள்ளை' என்னும் சொல்லாட்சியைக் குழந்தை என்னும் பொருளில் எடுத்தாளுகின்றன.

"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" என்கிறது தொல்காப்பியம். இதன்படி 'பிள்ளை' என்பது பறவைகளின் குஞ்சுகளைக் குறிக்கிறது. ஆனால் புறநானூற்றின்,

"சிலைத்தார்ப் பிள்ளையஞ் சிறாஅர்" (புறம், 380,வ.13) என்ற அடியினால் இளஞ் சிறுவனைப் 'பிள்ளை' என்ற சொல் குறிப்பிடுகிறது என்பதை அறியமுடிகிறது.

## மைந்தன் :

மகனை, 'மைந்தன்' என்றும் வழங்குவதுண்டு. சங்க இலக்கியங்களில் வலிமையுடையோன், வீரம் சார்ந்தவன் என்னும் பொருளிலேயே 'மைந்தன்' என்ற சொல் வழங்கப்படுகிறது.

"மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்" (புறம்,290,வ.6)

## மகவு—மகார்—மகன் :

'மகவு' 'மகார்' என்ற இரண்டு சொற்களும் மழலையரின் பெயர்களாகவே சங்க இலக்கியப் பாடல்களில் பாடப்பட்டுள்ளன.

'மகவுடை மகடூஉ' (பெரும்பாண், 58)
'வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்' (புறம்,324,வ.3)
'புட்கை போகிய புன்றலை மகா அர்' (மலைபடு, 253)

'மகன்' என்னும் சொல் சிலபாடல்களில் குழந்தையைக் குறித்துநிற்கப் பலபாடல்களில் வீரன் இளைஞன் என்ற பொருளில் இடம் பெற்றிருக்கிறது.

"வாணுதல் அரிவை மகன் முலையூட்ட" (ஐங், 404,வ.1)
"மாதருண்கண் மகன் விளையாட" (ஐங், 406,வ.1)

இப்பாடல் வரிகளில் குழந்தையைக் குறிக்கும் 'மகன்' என்பது,

"புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்" (புறம் 254, வ.8)
"கானகல் நாடன் மகன்" (குறிஞ்சிக்கலி, 39, வ.10)

இவ்விடத்து இளைஞனையும், வீரனையும், தலைவனையும் குறிக்கிறது.

திருமுருற்றுப்படையில் முருகனை, மகனே என்றும், சிறுவ என்றும், குழவி என்றும் (திருமுருகு,257-259) அழைக்கிறார் நக்கீரர்.

### *மக்கள் –இளைஞர் :*

'மக்கள்' என்ற சொல்லிற்கு மனிதர், என்று கழகத்தமிழகராதி பொருள் தருகிறது. வள்ளுவர், பல இடங்களில் குழந்தையரைக் குறிக்க 'மக்கள்' என்ற சொல்லைக் கையாள்கிறார். (குறள் எண் 64,65,66,68).

"மயக்குறு மக்கள்" (புறம்,188,வ.6)
"குறக்குறு மாக்கள் உண்ட மிச்சிலை" (நற், 168, வ.4)

இப்பாடல் வரிகளில் உள்ள மக்கள் (மாக்கள்) என்ற சொல் குழந்தையரையே சுட்டுகிறது.

'இளைஞர்' என்ற சொல்லும் சிலவிடத்து ஆண் குழந்தை என்னும் பொருளில் வழங்குவதைக் காணலாம்.

"ஈர்ந் தின்புறூஉ மிளையோர்" (குறுந்,61,வ.3)

மேற்குறிக்கப்பெற்ற குழந்தைப் பெயர்களை இக்காலத்திலும் நாம் வழங்குகின்றோம். இப்பெயர்கள் தமிழ்மொழியில் தொன்மைக்கும் தூய்மைக்கும் சான்றாகத் திகழ்கின்றன என்பது வெள்ளிடைமலை.

### *மக்கட்பேறு :*

இம்மையில் புகழும் மறுமையில் பேரின்பமும் பயக்கும் பெறலரும்பேறு மக்கட்பேறாகும் என்னும் கருத்தை,

"இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின்றி எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி
சிறுவர் பயந்த செம்மலோ ரென" (அகம்,66,வரி,1-4)

என்ற அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது. குழந்தையர், மாசுமருவற்ற அப்பழுக்கற்ற செயிர்தீர் காட்சிக்குரியவர் குழந்தையர் என்பதால், போர் மேற்கொள்ளும் பகைவர் கூட அவர்களை விரும்புவர் என்கிறது இப்பாடல்.

திருவள்ளுவரும் மக்கட்பேறு அல்லாத பிற பேறுகளைத் (சிறப்புகளை) தாம் மதிப்பதில்லை (குறள்,61) என்கிறார். பெற்றோருக்கு மட்டுமின்றி இப்பெரு நிலவுலகத்தில் வாழ்வோர்க்கெல்லாம் இன்பம் அளிக்கும் இயல்பினது என்று மக்கட்பேற்றின் சிறப்பை வானளாவ உயர்த்துகிறார்.

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (குறள்,68)

தன் மகன் மாநிலத்திலேயே முதல்வனாக் கல்வியில் சிறந்து விளங்கும்போது, தாய் தந்தையர் மட்டுமா, மகிழ்வர்? நிலவுலகமே மகிழ்ந்து பாராட்டும் அல்லவா? அந்த மகிழ்ச்சியைத்தான் மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்று பாராட்டுகிறார் வள்ளுவர்.

'தம்மைப் பெற்றவர் இவ்வுலகில் வாழும் காலத்தில் மட்டுமின்றி, அவர்கள் இறந்தபின்னர் மறுமை இன்பம் கிட்டும் வகையில் நீர்க்கடனும், உண்டியும், திதிதிவசமும் படைத்துப் பெற்றோரை வழிபடும் கடமைக்குரியவர் புதல்வர்' என்னும், நம்பிக்கை சங்ககாலத் தமிழ்ச் சான்றோரிடம் அரும்பி இருக்கிறது. இதன் வெளிப்பாடாகவே சங்க இலக்கியப் பாடல்களில்

"தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅதீரும்" (புறம், 9 வரி 3,4)

"புகழ்சால் புதல்வர் பிறந்தபின் வாவென" (புறம், 222 வ.3)

"பொன்போற் புதல்வனொடு என்னீதத்தோனே" (ஐங், 266,வ.4)

என்றவாறு பொன்போற் புதல்வர், புகழ்சால் புதல்வர் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன என்று கூறலாம்.

## மழலை இன்பமும் பயனும் :

மழலைச் செல்வம் தரும் இன்பத்தை நினைந்து பாடிய பாண்டியன் அறிவுடை நம்பியின் புறநானூற்றுப் பாடல் நிலைத்த புகழுக்குரிய பாடலாகும்.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே" (புறம்,188)

செல்வ வாழ்வென்பது, தனித்து உண்ணுதலில் இல்லை. விருந்தொடு உண்பதால் தான் இன்பம் தரும். அவ்வாறு விருந்தொடு உண்ணும் இன்ப நிகழ்வின்கண் தனது இளஞ்சிறுவன் குறுகுறு நடந்து வந்து, சிறுகையை நீட்டிப் பின் தந்தை உண்ணும் உணவில் இட்டும், தொட்டும், கவ்வியும், துழாவியும், கவ்விய சோற்றை உடலெங்கும் சிதறியும் இன்பச் சிறுதொழில் புரிகிறான். அவ்வாறு அக்குழந்தை சிதைத்துச் சிதறிய உணவைக குழந்தையைப் பெற்றவர் உண்ணுங்கால் உண்டாகும் இன்பம் பெரிதாதலை உணர்ந்த பாண்டிய மன்னன், தந்தையின் உணர்வை இப்பாடலில் பகிர்ந்து கொள்கிறான். அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வர் ஆதலால், மயக்குறு மக்களைப் பெறாதவர்களுக்கு உயிர் வாழும் நாளின் கண் பயனே இல்லை என்று பாடினான்.

சோறுண்ணும் குழந்தையின் குறும்புச் செயல்களைக் களிப்பூறும் வகையில் பாண்டிய மன்னன் பகர்ந்தது போலவே திருவள்ளுவரும் மழலை இன்பத்தைப் பலவாறு அனுபவிக்கின்றார்.

தம் மழலையரின் சிறுகை அளாவிய கூழ் உணவானது அமிழ்தத்தை விட இனியது (குறள் 64) எனத் தாயாகச் சுவைத்து மகிழ்கிறார் வள்ளுவர். பிஞ்சுக் குழந்தையின் உடம்பைத் தொடுவதும், அள்ளி அணைப்பதும், முத்தமிடுவதும், வருடிக் கொடுப்பதுமான எத்தனையோ இன்ப அனுபவங்களை "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" (குறள்,65) என்ற ஒரு வரியில் பொதிந்து வைத்துள்ளார். குழந்தையரின் பொருள் விளங்காச் சொற்களே மழலைச் சொற்கள் என்றாலும் அச்சொற்களைக் கேட்டலே செவிக்கு இன்பமாகும். முற்றாத இதழ்களிலிருந்து முதிராத சொற்கள் உதிரும்போது குழல் எங்கே? யாழ் எங்கே? எல்லாம் இந்த

மழலைக்குப் பிறகுதான் என்பதை,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்" (குறள், 66)

என்ற குறட்பா கூறுகிறது.

கலித்தொகை பாடல் ஒன்றில், தான்பெற்ற மகவினால் தலைவியெனும் தாய் அனுபவித்த இன்ப உணர்வுகளைத் தன்னைப் பிரிந்திருந்த தலைவனுக்கு உணர்த்துவதன் மூலம் வெளிப்படுத்துகிறாள்.

"கிளர்மணி ஆர்ப்ப ச்சா அய்ச் சாய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது"

"ஐய, காமரு நோக்கினை அத்தத்தா என்னு நின்
தேமொழி கேட்டல் இனிது"

"ஐய, திங்கட் குழவி வருகென யான்நின்னை
அம்புலி காட்டல் இனிது" (மருதக்கலி, 80, வரி,10,11,14,15,18,19)

குழந்தையின் தளர்நடை காண்டலும், அத்தத்தா என்னும் மழலைமொழியைக் கேட்டலும், அம்புலியை அழைத்து விளையாட்டுக் காட்டலும் ஆகிய இன்பக் குவியலை அனுபவிக்கும் தலைவிக்கு இவ்வனுபவம் இனிதானது. ஆனால் இந்த இன்பங்களை அனுபவிக்காமல் தந்தையாகிய தலைவன், தங்கையராம் பரத்தையரிடம் தங்கியிருப்பதுதான் கொடிது என்று பாடுகிறாள் தலைவி.

## *குழந்தைக்குப் பெயரிடல் :*

தந்தை வழியில் உள்ள முன்னோரின் பெயர்களையே குழந்தையருக்கு இட்டு வழங்குவது நந்தமிழ்ச் சமுதாயத்தின் வழக்கமாகும்.

"முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வன்" (மருதக் கலி, 75, வரி.24,25)

"அகன் பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்" (ஐங்,403,வ.3)

தாத்தாவின் பெயரைப் பெற்ற பெயரன் ஆதலால் அவன் பேரன்

என்றழைக்கப்படுகிறான். சங்ககாலத்தில் தந்தையின் பெயரையும், தாத்தாவின் பெயரையும் குழந்தைக்குச் சூட்டியிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது. இவ்வாறு குழந்தைக்குப் பெயரிடும் வழக்கம் இன்றுவரை மேற்கொள்ளப்படுகிறது.

### *தாய்ப்பால் ஊட்டல் :*

தன் குழந்தைக்குத் தூய்ப்பாலூட்டும் தாய்மை நிலையை இயற்கைக் காட்சிக்கு உவமையாக்கும் ஒரு அழகான பாடலை நற்றிணையில் காணலாம்.

"புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை
முலைவாய் உறுக்கும் கைபோல் காந்தள்
குலைவாய் தோறும் கொழுமடல் வாழை
அம்மடற் பட்ட அருவித் தீநீர்
செம்முக மந்தி ஆரும் நாட" (நற், 355, வரி.1-5)

புதல்வனைப் பெற்றெடுத்த நீலமலர்போன்ற கண்களை உடைய மடந்தை, தன் குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கையால் பற்றித் தாய்ப்பாலூட்டுகிறாள். அப்போது ஊறிப் பெருகிவரும் பாலை அக்குழந்தை பருகுகின்றது. இக்காட்சியைப் போல, வாழைப்பூவின் மடல் காந்தள் பூங்கொத்தோடு பொருந்த, அவ்வாழைப் பூமடலின் கண் பெருகிவரும் இனிய நீரைச் செம்முகப் பெண் குரங்கு பற்றிப் பருகுகிறது. ஒரு இயற்கைக் காட்சியை மிகச் சிறந்த தாய்மைக் காட்சியின் மூலம் விளங்குகிறது இப்பாடல்.

### *உணவூட்டல் :*

தன் மகவினை இடையில் தாங்கி நிலவினைக் காட்டிச் சோறூட்டும் தாயின் செய்கையானது நாம் எப்பொழுதும் காணக் கூடியதே. குழந்தைக்குச் சோறூட்டும் போது, நிலவுக்கும் சிறிது கொடுப்பது போல் பாவணை காட்டுவாள். இவ்வாறே அகநானூற்றுப் பாடலில் வரும் தலைவியானவள் தன் மகனுக்குப் பாலூட்டும் வேளையில் நிலவை அழைக்கின்றாள்.

"முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி

வருகுவை யாயின் தருகுவன் பாலென
விலங்கமர்க் கண்ணன் விரல்விளி பயிற்றி"-(அகம்,54.வரி:17-20)

'இளைய மதியே! பொற்றாலி யணிந்த என் மகனை நினைந்து இவண் வருதியென்றால் நினக்கும் பால்தருவேன்,' என்று இனிய மொழிகள் கூறித் தன் விரல்களில் நிலவை அழைத்து விளையாட்டுக் காட்டித் தன் குழந்தைக்குப் பாலூட்டுகிறாள் தலைவி. இப்பாடல், 'பிள்ளைத்தமிழ்' என்னும் சிற்றிலக்கியத்தின் அம்புலிப் பருவப் பாடல்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

## மழலையரின் இயல்பு :

சின்னஞ்சிறு குழந்தையர் சிறுசிறு தவறுகள் செய்யும்போது, பெற்றோர் அவர்களை அடித்துவிடுதலும் உண்டு. அடிவாங்கிய குழந்தைகள் பெற்றவரிடமே ஓடிவந்து தழுவிக் கொள்ளும். இத்தகைய குழந்தையை,

"தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா வென்னுங் குழவிபோல" (குறுந், 397, வரி 4,5)

என்ற குறுந்தொகைப் பாடலில் காணலாம். தாய் குழந்தையை அடித்தபோது, அது வாய்விட்டு அன்னையே என்றழைக்கிறதாம். சின்னஞ்சிறு மழலையரிடம் காணப்படும் இயல்பான பண்பினை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

## குழந்தையர் விளையாட்டு :

குழந்தைப் பருவம் விளையாடுவதற்குரிய பருவம் அல்லவா? "ஓடி விளையாடு பாப்பா" என்று பாடுகிறார் பாரதி. சங்க இலக்கியப் பாடல்களில் குழந்தையரின் விளையாட்டுக் காட்சிகள், கற்பவரின் மனதைக் கவரும் வகையில் பல உள்ளன. அவற்றுள் ஒரு சில.

வீரம் மிக்க இளைஞர்கள் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினை வேகமாகச் செலுத்தி மகிழ்வர். ஆனால் இளஞ்சிறார்களால் அவ்வாறு தேரை ஓட்டுவதற்கு இயலாது. அந்தத் தேர்மட்டும் தனியே நிற்பதை இச்சிறுவர்கள் பார்த்து விட்டால் போதும்! உடனே சிறுவர்கள் பலர் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, தேர்க்காலினைக் கையால் பற்றியும்,

தேரின் பின்புறம் நின்று தள்ளியும் இன்பம் அடைகின்ற காட்சியை,

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினும் கையில்
ஈர்ந்தின் புறூஉ மிளையோர்" (குறுந். 61, வரி.1-3)

*என்ற பாடலின் வழி கண்டு களிக்கலாம்.*

மணலில் வீடு கட்டி, உணவுகளை மணலாலே சமைத்து விளையாடும் விளையாட்டு, பெண் குழந்தைகளுக்குப் பிடித்தமான விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டினைச் சங்க இலக்கியம் "சிற்றில்" என்றழைக்கிறது. ஒரு சிறுமி, அழகாக அமைத்த சிற்றிலின் மீது ஓடி அச்சிற்றிலை அழித்ததுடன், அவள் சூடிய மலர்க்கோதையைப் பறித்தும், கையில் வைத்து விளையாடிய வரிப்பந்தை எடுத்துக் கொண்டும் ஓடிய ஒரு குறும்புக்காரச் சிறுவனைக் குறிஞ்சிக் கலியுள் காணலாம்.

"தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி" (குறிஞ்சிக்கலி, 51, வரி 1-4)

அக்குறும்புக்காரனைச் 'சிறுபட்டி' எனக் குறிக்கிறது இப்பாடல்.

## *பெண்குழந்தை வளர்ப்பு :*

பெண்ணுக்குரிய ஏழு பருவங்களில் பேதைப் பருவம் 5வயது முதல் 8 வயது வரை, பெதும்பைப் பருவம் 9 வயது முதல் 10 வயது வரை என்பதைப் பன்னிருபாட்டியலின் உரையால் அறியலாம்.

"பேதை அல்லை மேதையம் குறுமகள்
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினள்" (அகம், 7, வரி, 6,7)

இவ்வகப்பாடல், பெதும்பைப் பருவத்திற்கு வளர்ந்த ஒரு சிறுமியைப் பற்றிக் கூறுகிறது. 'அந்த வயதில் அவள் தோழியரோடு வெளியில் எங்கும் செல்லக் கூடாது. அவ்வூரில் அச்சம் தரும் பேய், அணங்கு ஆகியன உள்ளன. அதனால் வாசலைக் கடந்து விடலாகாது. காப்பினை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவள் இப்போது பேதை அல்ல. பெதும்பைப் பருவத்தினள்' என்று கூறும் இப்பாடலால்,

சிறுவயதிலேயே பெண் வீட்டிற்குள் இற்செறித்து வளர்க்கப்படுகிறாள் என்பது வெளிப்படுகிறது.

### *பிறப்பு சடங்குகள் :*

குழந்தை பிறந்த 11-ஆம் நாள், 16-ஆம் நாள், 30-ஆம்நாள், 40-ஆம்நாள் ஆகிய நாட்களில் ஏதாவது ஒரு நாளில் மாசுதீரத் தாயையும் சேயையும் தூய்மைப்படுத்தும் சடங்குகள் இக்காலத்தில் நடைபெறுகின்றன. இச்சடங்கினைப் புனிறு தீர்க்கும் சடங்குகளாகச் சங்ககாலத்தில் நடத்தியிருக்கின்றனர்.

"கணவர் உவப்பப் புதல்வர் பயந்து
பனைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊறப்
புலவுப் புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீர் அயர" (மதுரைக், 600-603)

இம்மதுரைக் காஞ்சிப் பாடல்வரிகள் புனிது தீர்த்தலாகிய சடங்கினைப் பற்றிப் பகர்கின்றன. இச்சடங்கு நடந்தபின்னர், குழந்தையைப் பெற்றெடுத்த மகளிர் குளத்து நீரில் நீராடுவர் என்ற செய்தியையும் இப்பாடலால் அறிகிறோம்.

### *மக்கட்பேறு தந்த மாண்பு :*

மங்கல நிகழ்ச்சிகள் என்றாலும், திருமண நிகழ்ச்சிகள் என்றாலும் குழந்தையரைப் பெற்ற பெண்களை முன்னிறுத்தி மங்கலச் சடங்ககளைச் செய்யவைக்கின்ற நிகழ்ச்சிகளை நாம் அன்றாடம் காண்கின்றோம். 'மக்களைப் பெற்ற மகராசி' என்று போற்றி அவர்களிடமிருந்து வாழ்த்துக்களைப் பெறுவதை நன்மையாகக் கருதுகின்றோம்.

"புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை" (ஆம், 86, வரி.11-17)

மகவைப் பெற்றெடுத்த நால்வர் சேர்ந்து, "பல்வேறு பேறுகளையும் பெறுக" என வாழ்த்தி, நீரொடு நெல்லும்பெய்து வதுவை

எனும் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். இத்தகைய பெருஞ்சிறப்பு, பெண்களுக்குக் கிடைத்தற்குரிய காரணம், அவர்கள் பிள்ளைப்பேறு பெற்றமையே ஆகும்.

## *தந்தையைத் திருத்தும் கோல் :*

பரத்தையிடம் உறவுகொண்ட தலைவன், தன்மனைவியை மறந்து பலகால் அவளுடன் தங்கிவிடுதல் உண்டு. சிலசமயம் அப்பரத்தையை மணம் செய்து கொண்டு புதுவாழ்வு வாழ்வதும் உண்டு. இத்தகைய ஒரு தலைவன், புதுமணம் செய்து கொள்வதற்காகத் தன்னை ஒப்பனை செய்துகொண்டு தேரில் புறப்பட்டுச் செல்கிறான். தன் மாளிகையின் கடைவாயிலைக் கடந்து வரும்போது, தந்தையைக் காணும் விருப்புடன் தத்தித் தளர்ந்து ஓடிவந்த தன் சின்னஞ்சிறு மகனைக் காணுகின்றான். உடனே தேரை நிறுத்திக் கீழிறங்கி வந்து, புதல்வனைத் தூக்கி அவனது பவளவாய் தன் மார்பில் படும்படியாக ஆரத் தழுவுகிறான். பின்னர் கீழிறங்கி விட, அக்குழந்தை தந்தையுடன் செல்லவேண்டுமென்று அழுது அடம்பிடிக்கிறான். அதனால் தன்மகனைத் தன்பாலணைத்துக் கொண்டு இல்லம் புகுந்தவன் மனம் மாறுகிறான். தன் செயலுக்கு நாணுகிறான். சின்னஞ்சிறு குழந்தை செய்த இம் மகத்தான செயலை அகநானூறு 66 ஆம் பாடல் எடுத்துரைக்கிறது. தன்மகனே தந்தையைத் திருத்தும் கோல்போலாயினன் என்று கூறும்,

> "அலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்டு
> அழுங்கின னல்லனோ அயர்ந்தனன் மணனே" (அகம்,66)

இப்பாடலில் குழந்தையிடம் கொண்ட தந்தையின் அன்பும், அக்குழந்தையால் தந்தை எனும் தலைவன் மனந்திருந்திய பண்பும் வெளிப்படுகிறது.

## *மழலைக்காக மறுமணம் :*

பழைய தமிழ்ச் சான்றோர், மகப்பேறு கருதித் தலைவன் இரண்டாம் முறையாகத் திருமணம் செய்து கொள்வது முறையே எனக் கருதினர். அத்திருமணத்தைக் குலப்பிறப்பாட்டியராகிய முதல்மனைவி உவந்து ஏற்றுக் கொண்டனள். இக்கருத்துக்களை,

> "பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை" (தொல், கள்.31)

"தாய்போல் கழறித் தழ்இக் கோடல்" (தொல்,ள்.32)

"மகன்தா உயர்பும் தன்னுயர் பாகும்" (தொல்,கள்,33)

எனவரும் நூற்பாக்களால் அறியலாம்.

"நின்னினுஞ் சிறந்தன ளெமக்கே நீ நயந்து
நன்மனை யருங்கடி யயர
எந்நலஞ் சிறப்பயா மினிப்பெற் றோளே"
-(ஐங், குறிஞ்சி 292, வர் 3-5)

இரண்டாவது முறையாக வதுவை செய்துகொண்டபோது தலைவனை நோக்கி முதல்மனைவி கூறுவதாக அமைந்த பாடலிது. மகப்பேற்றிற்காக இத்திருமணம் நடைபெற்றதால், புதுமணம் கண்ட இத்திருமகள் கணவனை விடவும் சிறந்தவளாகிறாள். அவள் மகப்பெற்றுழி தன்னை விடவும் சிறந்த வளாவாள் என வாழ்த்துகிறாள்.

## *நிறைவுரை :*

இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு புகழும் தரக்கூடிய பெறுதற்கரிய பேறு என்று புலவர்களும், உரையாசிரியர்களும் உரைத்தாலும் மழலை இன்பமானது, எல்லோரும் உணர்ந்து அநுபவிக்கின்ற எதார்த்தமான இன்ப நிகழ்ச்சியாகும். இக்காலத்தில் பொருளாதாரப் பின்னடைவுகளாலும் மக்கட்தொகை வளர்ச்சியினாலும் 'மக்கட்பேறு' என்ற நிலை மாறிக் 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற திட்டம் வந்துள்ளது. ஆனாலும் மழலையர் தரும் இன்பத்திலிருந்து மாறிநிற்கும் மனநிலை எவருக்கும் வந்ததில்லை. சங்க இலக்கியம் காட்டியுள்ள மழலை இன்பமானது காலத்தால் மாற்றம் பெறாதது. காலம் உள்ளவரைக் கற்று இன்புற்றபாலது.

## *அடிக்குறிப்புகள் :*

1. மு. அறம், குமர உள்ளம், ப.16
2. டாக்டர். முத்துச்சண்முகன், வெ. கிருட்டிணசாமி, தமிழில் குழந்தைப் பாடல்கள், பக்.21, 22.
3. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம் ஆசிரியர் முன்னுரை.

# பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேர நாட்டின் தாக்கம்

-கட்டுரை

**ஆதி பாலசுந்தரன்,**
தனிநிலை ஆய்வர்,
ஏ.எஸ்.கே. வளாகம்,
20, விக்டோரியா பிரஸ் சாலை,
நாகர்கோயில் - 629001.

## உள்ளுறை

01. முன்னுரை
02. குறிஞ்சியும் சேரரும்
03. பழனிமலை
04. இரு பகுதிகள்
05. பழனிமலைத் தொடரில் பழங்குடி மக்கள்
06. சேரநாட்டுத் தொடர்பு
07. இருப்பிடப் பெயர்
08. மருமக்கள் தாயமுறை
09. தம்பிரான் சொல் வழக்கு
10. பழனிமலைத் தொடர் செப்புப் பட்டயத்தில் தம்பிரான்
11. அப்பச்சி
12. சொல்வழக்கு
13. சேர மன்னர் இம்மலைப்பகுதிக்கு வந்த செய்தி
14. குன்னுவரின் கும்மிப் பாடலில் மோதகம் பூம்பொறைக் கோயில்
15. தாண்டி
16. சுள்ளியாறு
17. மோகினி முத்தாலே - வான் அரமகளிர் மண்ணுலகம் வந்து நீராடல்
18. மன்றில்
19. கையெடுப்பு
20. கார்த்திகைத் திங்கள்
21. மழை வேண்டும் மன்னாடி
22. தேவராடி
23. புலையர்
24. நிறைவுரை.

# பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேர நாட்டின் தாக்கம்

*- ஆதி பாலசுந்தரன்,.*

## 01- முன்னுரை

சமூகக் கலாச்சார ஒற்றுமை வேற்றுமைகள், வழக்கற்ற மொழிகள், சமகால மொழிகள், பல இனக் குழுக்களின் மொழிகள், மலைவாழ் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை ஆராயும் போது மானிட வரலாற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது.

அம்முறையில் பழனி மலையில் இப்போது அருகிவாழும் பழங்குடியினரிடையே, கேரளம் என இப்போது வழங்கப் பெறும் பண்டைச் சேர நாட்டின் தாக்கம் எந்த அளவு இருந்தது என்பதைக் கூறுவதே இங்கு நோக்கம்.

## 02 - குறிஞ்சியும் சேரரும்

ஐந்திணை வகுப்பில் குறிஞ்சியை முதலில் கூறுவது மரபு. குறிஞ்சி நிலத்திலேயே மிகுதியும் ஆட்சி செய்தவர் சேரரும், அவர்தம் கிளைஞரும்.

மும்மரபுள் முதல் மரபாகச் சொல்லப்படுவது சேரர் மரபு. போந்தை வேம்பே ஆர் என வரூஉம் - தொன்று தொட்டே பனம்பூ மாலை முதலில் சொல்லப்பட்டு வருவதைத் தொல்காப்பியனாரும் உடன்படுகின்றார்.

எனவே, தொன்மை சான்றகுடி சேரர் குடி. முன்னோர் சொல்லிய முறையிலேயே நாமும் சொல்லி வருகின்றோம்.

குறிஞ்சி நிலத்துடன் பெரிதும் தொடர்புடையவர் சேரரே. அதுபற்றியே வானவர் சிறப்பு வழக்காறு தோன்றியது. வான வரம்பன், வான வரையன், வான்யாறு - நினைக்கத் தக்கன.

குறிஞ்சியை விடுத்து, வெப்ப மண்டலத் தாவரக் காடுகளில் வளரும் பனையின் பூவே இவர்க்கு அடையாளப் பூவாகச் சொல்லப்ப்ட்டது ஆய்வுக்குரியது.

ஒரு கால், குமரிக் கண்ட ஏழ் குறும்பனை நாட்டழிவுக் குறையை உளம் கொண்டு நிறைவு செய்திருக்கலாம்.

There are other texts in which the *relationship is* depicted as distinct but harmonious or symbiotic, as in the "Tinai" ecologies of the Tamil Sangam texts, a concept that is just beginning to acquire importance in environmental history and needs to be discussed further" (Forgotten *themes* - *Prof. Romila Thaper*, *Historian* - The Hindu - Sunday, Dec, 19 - 2004.)

குறிஞ்சித் திணைச் சிறப்புக்கும், "நின்காடே கடவுள் மேன" எனச் சேரரைக் குறிப்பிடுவதற்கும் இச்சான்று பொருந்துகிறது.

"சங்க இலக்கியங்களில் க்ாணப்படும் வரலாற்றுக் குறிப்புகளை ஆய்ந்து வெளிக் கொணர்தல் வேண்டும்" (பேரா எம்.ஜி.எஸ். மேனன், தேசிய வரலாற்று ஆய்வு மைய முன்னாள் தலைவர் - தேசிய வரலாற்றுக் கருத்தரங்க முதன்மை உரை, நிர்மலா கல்லூரி, கோவை - 2004.)

### *03 - பழனி மலை*

பழனிமலை சங்க காலத்தில் "பொதினி" எனப்பட்டது. "ஆவினன்குடி" என்பார் நக்கீரர். பழனிமலைத் தொடரின் பகுதி பழனி. இத்தொடர் 2068 ச.கி.மீ. பரப்பளவுடையது. 2133 மீ. உயரம் கொண்டது. 500000 ஆண்டுகளுக்கு முந்திய பாறைகளும், 200000 ஆண்டுகளுக்கு முந்திய பாறைகள் சில இடங்களிலும் பழனிமலைத் தொடரில் அமைந்துள்ளனவாக நில அமைப்பியல் வல்லார் இவற்றின் அமைப்பைக் கொண்டு வரையறுக்கின்றனர்.

### *04 - இரு பகுதிகள்*

பழனிமலைத் தொடரை மேல் பழனிமலை, கீழ்ப்பழனிமலை என அதன் அமைப்பைக் கொண்டு பகுத்துள்ளனர்.

பெருமாள் மலைக்கு மேலே அமைந்துள்ள தொடர் மேல் பழனிமலைத் தொடர். அதற்குக் கீழே அமைந்துள்ள தொடர் கீழ்ப் பழனிமலைத் தொடர்.

## 05 - பழனிமலைத் தொடரில் பழங்குடி மக்கள்

(அ) 1. பழியர்கள் - பழியர்களுள் கீழ்ப் பழனி மலைப் பழியர், மேல் மலைப் பழியர்.. 2. முதவர் 3. மன்னாள் 4. ஊராளி 5. குறவர் 6. புலையர் 7. குன்னுவர் 8. மன்னாடி ஆகியோர் பழனிமலைவாழ் பழங்குடி இனத்தவர்.

இவருள் முதியோர் மறைந்தனர். எஞ்சியவர்களும் அருகியே வாழ்கின்றனர். எனவே, 'வாழ்ந்தனர்' என்றே கூறும் நிலை.

காடுகளை அழித்தல், மழை இன்மை, வறுமை முதலியவற்றால் இருந்தவர்கள் பிழைப்பினை நாடி வெளியேறிச் சென்று விட்டனர்.

(ஆ) கீழ்ப் பழனிமலைப் பழியர் "கல் (மலை) காட்டு பழியர்" அல்லது "புடைப்பழியர்" எனப்படுவர். தொன்று தொட்டுப் புடைகளில் (குகைகளில்) வசித்து வருபவர்.

குமரி மாவட்டத்தில் பொற்றைகள் சூழ்ந்த "கற்காடு" என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. நிலவியல் நோக்கில் ஆராய வேண்டும்.

மலையடிவாரக் காடுகளிலிருந்து மலைமேல் வந்து குடியேறியவர்கள் "முதுவர்" என்னும் பழங்குடியினர்.

## 06 - சேரநாட்டுத் தொடர்பு

இம்முதுவர், சேரர் ஆட்சிக்குட்பட்ட கொங்கு மண்டலம், கொச்சி - திருவாங்கூர்ப் பகுதிகளிலிருந்து, பழனி மலைத் தொடருக்குப் புலம் பெயர்ந்தவர்கள்.

உதகையில் "சேரன்கோடு" இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 07 - இருப்பிடப் பெயர்

மலை/மழைக்காடுகளுக்கு நடுவே பெரிய திடலாக இடம்விட்டு, வட்ட வடிவில் திடலைச் சுற்றி இவர்கள் அமைத்துள்ள 'அஞ்சு முகப் புல்', 'போதைப் புல்' வேய்ந்த குடில்கள் அமைந்துள்ளன.

இயற்கைச் சூழலை இணைத்துப் பார்க்கும்போது, கேரளத் 'தாவளம் குடிசை'களை நினைவுபடுத்துகின்றன. குடிசைகளின் பக்கவாட்டில் மூங்கில் படல்களை வைத்து அடைத்துள்ளனர். மண்தரைதான். வெப்பத்துக்காகக் 'கொறவந்தழை' யைப் பரப்பி வைத்துள்ளனர். அவர்கள் கூறுவது 'குரா மரத் தழையாக' இருக்கலாம்.

இக்குடில்களுக்குப் பொதுப்பெயர் உண்டு. ஒருவகைக் குடிசையின் பெயர் 'குமரிமடம்'. பிறிதொன்று 'இளந்தாரி மடம்'.

## 08 - மருமக்கள் தாயமுறை

மலையாளத்து *"மருமக்கள் தாயமுறை"* இவர்களிடையேயும் உள்ளது. இது, இம்மக்களிடையே சேரநாட்டின் தாக்கத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

குன்னுவர் பெண்கள் தந்தையின் சொத்துரிமை, அப்பெண்களின் மக்களுக்கே சேரும். இது, கேரள மருமக்கள் தாயமுறைக்கு இசைந்து வருகிறது.

இவுர்கள் சொத்து என்று குறிப்பிடுவது, மலங்காட்டில் *தாங்கள் திருத்தி அமைத்த விளைச்சல் நிலத்தையாகும்.*

## 09 - தம்பிரான் சொல் வழக்கு

"மன்னான்" பழங்குடி இனத்தலைவன், "பூனையாத்துத் தம்புரான்" என அழைக்கப்படுகின்றான்.

வான் யாறு - வானியாற்றுக்கும் சேர மன்னர்க்கும் அவர்தம் கிளைஞர்க்கும் தொடர்பு உண்டு. "பூவானியாற்றுத் தம்பிரான்" என்பது பேச்சு வழக்கில் பொருள் புரியாமல் "பூனையாத்துத் தம்பிரான்" என மருவியுள்ளது.

சரி. இனக்குழுத் தலைவருக்குத் "தம்பிரான்" - சிறப்புப் பெயர் வந்தது எப்படி?

"செங்கேணி சாத்தன் நாலாயிரவன் கரிகாலச் சோழச் செங்கேணி நாடாழ்வான்" என்னும் பெயர் கி.பி. 1069 ஆம் ஆண்டு வடார்க்காடு மாவட்டக் குறுநில மன்னன் கல்வெட்டொன்றில் வந்துள்ளது.

தன் மரபின் முன்னோன் கரிகாற்சோழன் பெயரை, இக்குறுநில மன்னன் தன் பெயருடன் இணைத்துச் சொல்வதைப் போன்று,

சேர மன்னரின் பெருமையும், தொடர்பும் கருதி, அம்மன்னர்க்குரிய தம்பிரான் சிறப்புப் பெயரை இவ் இனக்குழுத் தலைவர் இணைத்துக் கொண்டார்.

## 10. பழனிமலைத் தொடர் செப்புப் பட்டயத்தில் 'தம்பிரான்':

கோடைக்கானல் நகரியத்துக்கு மேற்புறச் சாரலில் - மேல் பழனிமலைத் தொடரில் போலூர் என்னும் சிற்றூர் உள்ளது. புகலூர் என்பது மருவி போலூர் ஆயிற்றாம்.

இவ்வூரைப் பற்றிய அரிய செப்புப் பட்டயம் ஒன்று, போலூர் அருகில் உள்ள கூக்கால் என்னும் சிற்றூரில் வாழும் திரு கே. சேதுநாத மன்னாடி குடும்பத்தினரிடம் உள்ளது.

அப்பட்டயத்தில், "ஸ்ரீஉ மது சாலி வாகன .... விசால லக்ஷணம் பொருந்தியிருக்கிற வாக்குடைய 'மஹாராஜாவான தம்பிரான்' பாண்டியராஜா தென் பழனியை விட்டு எழுந்தருளியாகி 'தம்பிரான் சமூகத்திற்கு' செல்வனாசாரி ஒருவன் கூடவே சிற்பி சாஸ்திரம் ... வருவான். அவனுக்குத் 'தம்பிரான்' கட்டளை இட்டது.... 'நாக நாயக்கத் தம்பிரான்'... 'தம்பிரான்' முன் நாங்கள் எதையும் வெட்டுவதாக ராஜா ரத்துச் செய்தார்... இவ்வூரில் மீனாம்பிகை அருளினாலும், 'தம்பிரான்' வாக்கினாலும்....."

இச்செப்புப் பட்டயத்தில் 'தம்பிரான்' என்னும் சொல் வழங்கும் இடங்கள் மட்டுமே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

மலையாள வழக்கில் அரசனைத் 'தம்பிரான்' எனவும், அரசியைத் தம்பிராட்டி எனவும் வழங்கப்படுவதைப் பழனிமலைத் தொடர் பழங்குடி இனத்தவரிடையேயும் வழக்கில் உள்ளதைக் காணலாம்.

இம்மக்கள் அரசரைக் குறிப்பதற்கும், குறுநில மன்னரைக் குறிப்பதற்கும் தம்பிரான் என்னும் சொல்லைப் பயன்படுத்தினர்.

சேர மன்னருக்குப் பயன்படுத்திய அச்சிறப்புப் பெயரை, பட்டயத்தில் பாண்டிய மன்னர், குறுநில மன்னர் போன்றோருக்கும் பயன்படுத்தியிருக்கின்றனர்.

பழனிமலைத் தொடர் இச்செப்புப் பட்டயத்தில் சிற்பக் கைவினைக் கலைஞர் செல்வனாசாரிக்கு ஒரு சமூகப் பெருமை வழங்கி ஏற்றுக் கொண்டமைக்கு இணையாக,

சேரநாட்டிலும் 'காவுதீண்டல்' விழாவில் பொற்கொல்லருக்குச் சமூகப் பெருமை வழங்கிச் சிறப்புச் செய்திருப்பதைக் கீழ் வரும் சான்றால் அறியமுடிகிறது.

" Indeed the festival opens with the symbolic ceremonial : Kavu Theendal" or purifiying of the temple by a goldsmith going round the temple three times ringing a bell at about 7 in the morning" (Mirror, Feb, 1984)

இரண்டுமே திருக்கோயிலோடு தொடர்புடைய செயல்களுக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன.

பழனித் தலத்தினின்றும், பழனிமலைத் தொடர்வழியே மலையேறி பூம்பொறை தலத்துக்கு வந்த அருணகிரியார்க்கும் அவ் 'வாடை' வீச, 'தண்தார் புரளும் மார்பினை' 'மயிலேறும் தம்பிரானே' என பாடிப் போற்றுகின்றார்.

சேரநாட்டு அஞ்சைக் களத்து அப்பனைப் போற்ற 'வந்த சுந்தரர்க்கும் 'மலையாள வாடை' வீச, 'தம்பிரான் தோழர்' ஆனார்.

மேல்மலை மக்களின் வழிபடு தெய்வங்களுள் ஒன்று "*உண்ணுவான் தம்பிரான்*" என்பது. வெண்ணெய் உண்ணும் தம்பிரானாக இருக்கலாமோ?

## 11. *அப்பச்சி*

பழனிமலை பழங்குடி மக்களுள் ஓர் *இனத்தாராகிய* 'மன்னாடி' இனத்தவரின் குழுத்தலைவர் 'அப்பச்சி' என *மதிக்கப்படுகிறார்.*

கேரளத்துச் சபரிமலையில் சன்னிதானம் செல்லும் வழியில் 'அப்பச்சி மேடு' உள்ளது.

## 12 - சொல்வழக்கு

இம்மலைப் பழங்குடி மக்கள் மேற்றிசையைக் "குடக்கு" என்கின்றனர்.

பலாக் கொட்டையைக் "கங்கு" என்னும் தெலுங்குச் சொல்லால் கூறுகின்றனர்.

பட்லங்காடு, குட்லங்காடு என்னும் சிற்றூர்கள் உள்ளன. பட்லம், குட்லம் - தெலுங்குச் சொற்களாக இருக்குமோ?

குடக்கு என்னும் தூய தமிழ்ச் சொல்லைப் போன்று கானல்நாடு, செங்கரைக்கானல், பெரும்பாறை, பெரும்பள்ளம் முதலிய இலக்கிய நயம் பொதிந்த பெயர்களைக் கொண்ட ஊர்களும் உள்ளன.

கேரளத்துக் கா, காவு, பொற்றை, பள்ளம் போன்ற சொற்களோடு இணைந்த ஊர்களின் பெயர்களோடு இப்பெயர்கள் ஒத்து வருகின்றன.

## 13 - சேர மன்னர் இம்மலைப் பகுதிக்கு வந்த செய்தி

கோடைக்கானல் நகரியத்துக்கு வடமேற்கு சாரலில் 15கி.மீ தொலைவில் மன்னவனூர், பூம்பாறை ஆகிய மலைச் சிற்றூர்கள் அமைந்துள்ளன. இவை மேல் பழனிமலைத் தொடரில் அமைந்துள்ளன.

### அ. மன்னவனூர்

பதியெழுவறியாப் பழங்குடிக் 'குன்னுவர்' வாழும் பழம்பதி மன்னவனூர். இவர்கள் வாய் மொழியில் 'சேரமன்னன்' ஒருவன் இவ்வூருக்கு வந்து சென்றதாகச் சொல்கிறார்கள். செவி வழிச் செய்திதான்.

மன்னவன் வந்தமையால் மன்னவனூர். "தேரா மன்னா!" நினைவு வரும்.

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காண வந்த செய்தியும், குன்றக் குறவர் மலைபடு பொருள்களை மன்னன் முன் வைத்து, குரவை அயர்ந்து வணங்கிப் போற்றிய செய்தியும் சேரன் இளவல் சிலம்பால் அறிவோம்.

இப்பழங்குடியினரின் முன்னோர் ஆண்டுதோறும் மலைபடு பொருள்களுடன் திருவாங்கூர் மன்னரைக் காணச் செல்லும் வழக்கம் இருந்து வந்ததையும் இவர்கள் சொல்லுகிறார்கள்.

இச்செய்தியும் இங்கு ஒப்பிடத் தக்கது. இவ்வழக்கம் மரபு வழியாக இருந்து வந்தது.

அவ்வளவு தொலைவு 'வந்தும் போயும்' இருந்திருக்குமா என ஐயம் எழுந்தது.

கோடை மலை உச்சியில் கேரளத்தைத் தொடுமாறு மூணாறு செல்லும் தடம் இருந்ததாகவும், நடந்து செல்லும் பழக்கம் ஒழிந்தமையால், பஸ் பயணம் வந்து விட்டமையால் அவ்வழி ஒரு வழியாய் மறைந்ததாகவும் சொல்கிறார்கள்.

கீழே, கிழக்கே பெரிய குளத்திலிருந்து 'அடுக்கம்' (பன்மலையடுக்கத்து) என்னும் மலைச் சிற்றூர் வழியாக மலை உச்சிக்கு வரும் ஒற்றையடிப் பாதையும்,

மேற்கே பழனியிலிருந்து மலையேறி 'பெரும்பள்ளம்' மலைச்சிற்றூர் வழியாகக் கீழ்ப் பழனிமலைத் தொடருக்கு வரும் ஒற்றையடிப் பாதையும் மறைந்துவிட்டன. செலவின்மையால்

இதேபோல் சேரநாட்டிலிருந்து 'பண்ணைக்காடு' என்னும் 4500 அடி உயர மலைச் சிற்றூர்க்கு வந்து அங்கே குறுக்கிடும் மலையைத் தாண்டி, கீழ்பழனிமலையில் உள்ள 'தாண்டிக்குடி' என்னும் ஊருக்கு வர உதவிய மலை ஒற்றையடிப் பாதையும் 1965 இல் பஸ் வரும்வரை புழக்கத்தில் இருந்து வந்தது.

### ஆ. பூம்பாறை

பூம்பாறைஎன்று இப்போது மருவி வழங்கப்பெறும் மலைச் சிற்றூரின் பெயர் 'பூம்பொறை' என்பது.

சேர மன்னருள் (1) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை(2) சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை(3) சேரமான் கணைக்கால் இரும்பொறை(4) குடக்கோ சேரல் இரும்பொறை(5) யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறைஎனச் சேர மன்னருள் ஐவர் 'பொறையர்'களாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

சேரன் செங்குட்டுவன் வடபுலம் செல்லுங்கால், எழில்மலை அருகில் உள்ள நீலமலைக் குன்றில் தங்கியதாகவும், தங்கியமைக்கு அதன் அருகில் உள்ள செங்கோட்டூர் சான்று பகர்வதாகவும் சேரர் வரலாறு கூறுகிறது.

அதுபோன்று, சேரநாட்டு உட்பிரிவான பொறைநாட்டை ஆண்ட பொறைமன்னருள் ஒருவன், இம்மலைப்பகுதிக்கு வந்து தங்கியுள்ளான். பொறையருள் யாவன் எனச் சுட்டிச் சொல்லுமாறில்லை.

பூம்பொறையில், குறிஞ்சிக் கிழவன் முருகனுக்குக் கற்றளி எடுக்கப்பட்டுள்ளது. சேயோன் என்பதற்குப் பொருந்தும் வண்ணம் அம்முருகவேளுக்குப் பெயர் ‘குழந்தை வேலப்பன் என்பது.

பழனித் திருக்கோயில் போன்றே இத்திருக்கோயில் அமைப்பும் உள்ளது. சேர நாட்டை நோக்கியவாறு வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ளது.

பழனி முருகன் திருக்கோயிலுக்கு மலையாள அடியவர்கள் மிகுதியும் வருவதை இவ்விடத்து ஒப்பிடலாம்.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. பழனிக் கோயிலைப் போன்றேகாலத்தால் பழைமையானது. “பூனையாத்துத் தம்பிரான்” (பூவாணியாற்றுத் தம்பிரான்) இக்கோயிலைக் கட்டியதாக அம்மக்கள் சொல்லுகிறார்கள்.

பூம்பொறையில் எழுந்தருளியுள்ள குழந்தைசாமி மீது அருணகிரியார் பாடிய திருப்புகழ் ஒன்று உள்ளது.

தேவாரத்தில் வைப்புத் தலமாகப் பாடுவதுண்டு. அவ்வாறின்றி, அருணகிரியார் இங்கு வந்து, கை புனைந்து இயற்றாக் கவின்மிகு இயற்கையில் திளைத்துப் பாடியுள்ளார்.

“மாந்தளிர்” எனத் துவங்கும் திருப்புகழ்ப் பாடலில் “பூந்தளிர்கள் வீசு வேங்கைகள் பலாசு, பூங்கதலி கோடி திகழ்சோலை, பூந்தடம் உலாவும் கோம்பைகள் குலாவும் பூம்பொறையில் மேவு பெருமாளே!” எனப் பூம்பொறைவேலப்பனைப் பாடியுள்ளார்.

மலைவழிப் போக்குவரத்து உண்மை இதனாலும் உறுதியாகின்றது.

*- தொடரும்*

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ.குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484

# மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**
**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**
மற்றும்
**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**
குறித்த கட்டுரைகள் அனுப்ப

**தொடர்பு முகவரி**

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-5575615

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை–1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA